# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## STC. No.1359/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | நாகலிங்கம் | த-பெ | தங்கராஜ் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 31/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | Yamaha Show Room ஊழியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.08.2026**

**1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 ம் எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து Yamaha Show Room ஊழியராக வேலை செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை 2022 ம் வருடம் நான் Yamaha Show Room ல் இருந்த போது சாக்கோட்டை போலீசார் வந்து Yamaha ray ZR என்ற இருசக்கர வாகனத்தின் சேத மதிப்பீட்டு விவரம் கேட்டார்கள். நான் மேற்படி வாகனத்தை பார்த்துவிட்டு அதற்குரிய சேத மதிப்பீடு விவரம் அறிக்கை கொடுத்தேன். மேற்படி **சேத மதிப்பீடு விபர அறிக்கை அ.சா.ஆ.4**. போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

மேற்படி சேதம் எதனால் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சேதம் பற்றிய விவரத்தை யார் என்னிடம் கேட்டது என்றால் தனிநபர் கேட்டார். மேற்படி தனிநபர் யார் என்று எனக்கு தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 14:14:31 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# STC. No.1359/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | செல்வபாண்டி | த-பெ | ராமசாமி |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 60/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சார்பு ஆய்வாளர் ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **17.08.2026**

**1, 2 எதிரிகள் ஆஜர். 3, 4 ம் எதிரிகள் ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

---------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு சார்பு ஆய்வாளராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். 2022 ம் வருடம் நான் சாக்கோட்டை காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 15.09.2022 அன்று 16.30 மணியளவில் நிலைய பணியில் இருந்த போ ருக்மணி என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண்.174/2022 இதச பிரிவுகள் 448, 427 ஆகிவற்றின் கீழ் முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5**. பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 3 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சாரதி மற்றும் வள்ளி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் ஆகியவை தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6**. பின்னர் எதிரியை தேடி சென்ற நிலையில் 02.10.2022 அன்று 10.30 மணியளவில் நிலையம் ஆஜர் ஆனவரை குற்ற காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இந்த வழக்கின் இருசக்கர வாகனம் சேதம் அடைந்தது தொடர்பாக காரைக்குடி Yamaha இருசக்கர வாகனம் ஊழியர் நாகலிங்கம் என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து சேத மதிப்பீடு பெற்று அவரை விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றேன். எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 18.11.2022 அன்று மேற் சொன்ன பிரிவுகள் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்வது 21.08.2022 என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல்

கிடைத்தது 15.09.2022 என்றால் சரிதான். புகாருக்கான காலதாமதத்திற்கு காரணம் புகாரிலோ, விசாரணையிலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சாட்சிபட்டியலில் உள்ள 1 முதல் 5 வரையிலானவர்கள் புகார்தாரரின் உறவினர்கள் என்று எனது விசாரணையில் தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான். எதிரிகள் குடும்பத்திற்கும் அ.சா.1 ன் குடும்பத்திற்கும் சொத்து சம்மந்தமாக முன் விரோதம் இருந்தது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். வாதிக்கும் வாதியின் கொழுந்தனுக்கும் இடையே தான் சொத்து பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். குற்ற எண்.151/2022 என்ற எண்ணில் வழக்கு நிழுவையில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் எதிரி யார் என்றால் அரவிந்தன். எதிரிகளின் தாயார் லதா குற்ற எண்.151/2022 என்ற எண்ணில் அரவிந்தனுக்கு எதிராக வழக்கு தாக்கல்செய்து மேற்படி வழக்கும்நிலுவையில் உள்ளதால் அதில் இருந்து அரவிந்தனை தற்காப்பு செய்வதற்காக இந்த எதிரிகளுக்கு எதிராக அ.சா.1 கொடுத்த பொய்யான புகாரை முறையாக விசாரணை செய்யாமல் எதிரிகளுக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் சொன்ன விதத்தில், சொன்ன நேரத்தில் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எனது குற்ற இறுதி அறிக்கைக்கு ஆதரவாக எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 10:14:36 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,

காரைக்குடி.